

கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 58 இதழ் : 01 ஏப்ரல் 2023 விலை ரூ.25/-

## வீட்டுக்கு அனுப்ப வேண்டும்தானே! – ம.ரா.

## கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ் ரூ 25

ஓராண்டு சந்தா ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க அன்புகூர்ந்து
**www.kanaiyazhi.com** அல்லது
**magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிதழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி பெறலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.

## மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. 147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

Kanaiyazhi Tamil Magazine

G Pay

# உள்ளடக்கம்

## கட்டுரை


| | |
|---|---|
| மு. இராமசுவாமி | 06 |
| கவிதைக்காரன் இளங்கோ | 27 |
| சா. தேவதாஸ் | 46 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் | 57 |


## சிறுகதை


| | |
|---|---|
| தேவகி கருணாகரன் | 20 |
| வாசுதேவன் அருணாசலம் | 44 |
| சந்திரகிருஷ்ணன் | 51 |


## கவிதை


| | |
|---|---|
| ஆர். வத்ஸலா | 23 |
| ந.சிவநேசன் | 26 |
| ரகுநாத் வ | 45 |
| நிர்மலாகணேஷ் | 50 |
| ப.காளிமுத்து | 55 |
| செ.புனிதஜோதி | 56 |
| கவிஜி | 56 |


## கடைசிப் பக்கம்


| | |
|---|---|
| மரன் | 69 |

# பத்திரிகை செய்தி

**"எழுத்து" தமிழிலக்கிய அமைப்பு** ஆண்டுதோறும் நடத்தும் **திருமதி.சௌந்தரா கைலாசம்** இலக்கியப் பரிசு 2022-ம் ஆண்டுக்கான நாவல் போட்டிக்கு கருத்தாழம் கொண்ட பிரசுரிக்கப்படாத சிறந்த நாவல்கள் வரவேற்கப்படுகின்றன. இருநூறு முதல் முந்நூறு பக்க அச்சு அளவிலான, கணினி அச்சு செய்யப்பட்ட மூன்று பிரதிகளை கீழ்க்கண்ட **"எழுத்து"** முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நடுவர்களுடன் இணைந்து அறங்காவலர் குழு தேர்வு செய்யும் நாவலுக்கு **ரூபாய் இரண்டு லட்சம் மற்றும் சான்றிதழ்** வழங்கப்படும். நாவல்கள் அனுப்ப கடைசித் தேதி **ஏப்ரல் 30.**

**எழுத்து முகவரி :**

3C, எல்டோராடோ, 112 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600034.
தொலைபேசி : 044 - 28270937

**மேலும் தொடர்புக்கு :**

செல் - 9486361884, 9841440410

இவண்

**(கவிஞர் இலக்கியா நடராஜன்)**
**(எழுத்துக்காக)**

3C, எல்டோராடோ,
112, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை - 600 034.
தொலைபேசி : 044-2827 0937.

மின் அஞ்சல் : ezhuttu@gmail.com
முகநூல் : ezhuttu
ட்விட்டர் : @ezhuttu
வலைதளம் : www.ezhuttu.com

வருமான வரி சட்டம் பிரிவு 80-G பதிவு எண் : URNo AAATE5967G/05/14-15/T-0049/80G Dt.27/03/2015



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# “இப்ப இருக்கிறவன் அப்புறமில்ல!”

காலை வெயிலின் இதமான சூடு சுரீர் என்ற பதத்திற்கு மாறிக்கொண்டிருந்தது. தெருவின் ஓரத்தில் ஒரு வீட்டின் சுற்றுச் சுவரையொட்டி இருந்த ஒரு சிறிய ஆழமில்லாக் குழியில் உடலைச் சுருக்கி ஒடுக்கித் தலையை மட்டும் பள்ளத்திற்கு வெளியிலிருந்த இரண்டு சிறிய தட்டையான கற்களுக்கு நடுவில் கிடத்தி, தெருவில் சென்று கொண்டிருந்த வாகனங்களின் சத்தம் தன்னை எந்தவிதத்திலும் தொந்தரவு செய்துவிடமுடியாது என்பதுபோல் கண்மூடிக்கிடந்தான் மொடாஸ். சங்கு அருகில் வந்ததை சில வினாடிகள் கழித்துத்தான் உணர்ந்தவன்போல் தலையை அசைக்காமல் கண்களை மட்டும் திறந்து, வந்திருப்பது சங்குதான் என்று உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். தூங்கவில்லை. “அண்ணே! எழுந்திரு! அடிக்கிற வெயில்ல மீசையெல்லாம் கருகப்போகுது! நேத்து என்ன முசல் வேட்டையா?” என்ற சங்குவின் கேள்வி காதில் விழுந்ததும் மொடாஸ் மெல்ல உடலை முறுக்கி, மல்லாக்க நிமிர்ந்து, சங்கு பக்கம் பாரம் ஒருபக்கம் இழுத்ததுபோல் சாய்ந்து, பின் தலையைத் தூக்கி ஒரு பெரிய கொட்டாவி விட்டவாறு சங்குவைப் பார்த்தான். “யேண்ணே! மரத்திலிருந்து ஒரு எல விழுந்தாக்கூட சட்டுன்னு எழுந்து என்னானு பாப்பே! தெருவுல போற வண்டிக சத்தம் எதுவும் காதுல விழுகாத மாதிரியில தூங்குற!” என்றான் சங்கு. “கண்ணு மூடியிருந்தா, தூங்குறாங்கன்னு அர்த்தமா? தூங்காம கண்ணமட்டும் மூடி கால வெயில்ல படுத்திருக்கிற சொகமே தனிடா, சங்கு” என்று மீண்டும ஒரு கொட்டாவி விட்டுக்கொண்டே பதில் சொன்னான் மொடாஸ். “வர வர நீ மனுசங்க மாதிரியே பேசுற! நல்லதுக்கில்ல சொல்லிட்டேன்” என்று கிண்டலடித்தான் சங்கு. “செவளச்சிய பாத்தியா? அவள ஆளையே காணோம்? போனவாரம்பூராம் இங்க நம்மகூடத்தான சுத்திக்கிட்டிருந்தா? எங்க போனான்னு தெரியலையே!” என்று ஒரு சிறு ஏக்கத்துடனேயே கேட்டான் மொடாஸ். “எங்கள்ல ஒருத்தன ஒரு மாசமாக் காணோம்னாலும் தேட மாட்ட! செவளச்சி வரலேன்னா துடிச்சுப்போயிற! பொல்லாத உலகமடா!” என்று அலுத்துக்கொண்டான் சங்கு. “இவன்வேற!” என்ற ஒற்றைவார்த்தைப் பதிலோடு ஒரு புன்முறுவல் சேர்த்து நிறுத்திக்கொண்டான்

மொடாஸ். "அவளுக்கு 'டைம்ன்னு' நினக்கிறேன். உள்ள வச்சு பூட்டிட்டானுங்க!" என்றான் சங்கு. "வெவஸ்த கெட்டவனுங்க, இந்த மனுசப்பயலுங்க. எந்த நேரத்தில சேர்ந்திருக்கணுமோ அந்த நேரத்தில பிரிச்சிடுறானுங்க. எந்த நேரத்தில சேர்ந்திருக்கத் தேவையில்லையோ அந்த நேரத்தில சும்மா சுத்த விட்டுடுறானுங்க. இவனுகளப் படைக்கலேன்னு யார் அழுதான்னுதான் தெரியலடா, சங்கு" என்று இயற்கையின மீதிருந்த தன் ஆதங்கத்தைக் கொட்டினான் மொடாஸ். "சரியா... சொன்ன!" என்று ஒரு சபாஷ் போட்டான் சங்கு.

மொடாஸும் சங்குவும் பேசிக்கொண்டிருக்கும்போது, பின்னங்கால்களை சற்று இழுத்து இழுத்து தெருவுக்குள் நுழைந்துகொண்டிருந்தான் மணி. "அண்ணே! மணி வர்றான். பாரு. ஆளு கொஞ்சம் சரியில்லேன்னு நெனக்கிறேன். இவ்வளவு மெதுவா வர்றான். நல்லா சுறுசுறுப்பா இருப்பானே?" என்று மணி வருவதையே பார்த்துக்கொண்டிருந்தான் சங்கு. மணி அருகில் வந்தான். சங்கு அவனைச் சுற்றிச் சுற்றி வந்தான். மெல்ல மொடாஸிடம் சென்று மெதுவாக மொடாஸின் காதருகே முணுமுணுத்தான் "அண்ணே! அதக் காணோம்!" "எதடாக் காணோங்கிற?" என்றான் மொடாஸ். "மணிய காணோம்ண்ணே!" என்று இன்னும் மெதுவாக மொடாஸிடம் சொன்னான். "மணிதான் இங்க இருக்கானேடா! உனக்கென்ன கிறுக்குப்பிடிச்சிடுச்சா?" என்று கடிந்தான் மொடாஸ். "அண்ணே! நான் இந்த மணியச் சொல்லலே! மணியோட மணியக் காணோம்ண்ணே!" என்று கடித்து இறுக்கிக்கொண்ட பற்களின் இடையே வார்த்தைகளை வெளியே தள்ளினான். "என்னடா சொல்லுற! மணியோட மணியக்காணோமா!" அதிர்ந்து போனான் மொடாஸ். மெல்ல எழுந்து மணியைச் சோதித்தான். பின்னர் சங்குவைப் பார்த்தான். என்ன சொல்வதென்று தெரியாமல் இருவரும் வாயடைத்து நின்றனர். "மணி! என்னடா ஆச்சு?" என்று வாய்திறந்து கேட்டேவிட்டான் மொடாஸ். "வளப்பு நாயா இருக்கிறது பெருமையில்லடான்னு இன்னிக்குத்தான் புரிஞ்சதுடா, சங்கு" என்று சங்குவின் மீது கொஞ்சம் சாய்ந்தவாறு வலியுடனும் வேதனையுடனும் சொன்னான் மணி. "என்னடா, சொல்லுற? நாங்கெல்லாம் வளப்பு நாய்கன்னு பெருமை பீத்திக்கிட்டு அலைவ! என்னடா ஆச்சு மணி உனக்கு?" என்று முகத்தில் ஒரு புதிர்க்குறியோடு கேட்டான் மொடாஸ். "வேண்டான்டா! வேண்டாம். அந்த வேதனையக் கேட்காதீங்கடா! எவனுக்கும் இப்படியொரு நெலம வரக்கூடாதுடா! வரக்கூடாது!" என்று மணி கூறிய வார்த்தைகளில் அவனுடைய வேதனை நன்றாகவே வெளிப்பட்டு சங்குவையும் மொடாஸையும் அதிர்ந்துபோக வைத்தது. "மொதல்ல உட்காருடா! உட்காரு! ஏதாவது சாப்பிடுறியா?... சங்கு! அந்தக் குப்ப மேட்டுக்குக் கிழக்க முசலு தொடை கொஞ்சம் கிடக்கும். நேத்து மிச்சம்தான். போய் எடுத்துக்கிட்டுவா! மணியப் பாக்க பாவமா இருக்குடா" என்று நெகிழ்ந்தான் மொடாஸ். "வேணாம்டா! அதெல்லாம் வேணாம்டா! என் வேதனைய அது அடக்காதுடா! சங்கு! கொஞ்சம் எங்கூடமட்டும் இருடா! போதும்" என்றபடியே உட்கார முயன்று சட்டென்று சரிந்து பொத்தென்று தரையில் உடம்பைக் கிடத்தினான் மணி. "என்னதான் ஆச்சுடா? சொல்லுடா? என்றான் வடியக்காத்திருந்த கண்ணீரோடு மொடாஸ். "எல்லாம் ஆச்சுடா! எல்லாம் ஆச்சு! ரெண்டு நாளைக்கு முன்னாடி வீட்டுக்கு ஒருத்தன் வந்தான்டா. என்ன சங்கிலியில கட்டிப் போட்டுட்டாங்கடா! கப்பு மாதிரியிருந்த ஒண்ணுக்குள்ள

வாயத் திணிச்சு நல்லா... இறுக்கிக் கழுத்து மேல கட்டிட்டாங்கடா. வந்தவன் என்னத்தையோ எடுத்து, ஊசிதான்னு நெனக்கிறேன், என்னோட வலது முன்னங்கை நரம்பில போட்டான்டா. ஒரு பத்து செகண்ட்ல மயங்கி கீழ விழுந்துட்டேன். அடுத்து என்ன நடந்துச்சுன்னு தெரியல. சுயநினவு வந்து எந்திருச்சுப்பாத்தா ஒரு பயலையும் காணோம். என்னோட மணியையும் காணோம்'' என்று வேதனைகளுக்கிடையில் விவரித்தான் மணி. சில வினாடிகளின் மௌனத்திற்குப் பின் மணியே தொடர்ந்தான். "என்னோட சந்ததி என்னோடு முடிஞ்சிருச்சுன்னுகூட எனக்கு வருத்தமில்லடா! என் வருத்தமெல்லாம், செவளச்சி முகத்தில எப்படிடா நான் முழிப்பேன்?'' என்று மணி கூறிய வார்த்தைகளில் வழிந்த வேதனையை சங்குவாலும் மொடாஸாலும் உணரமுடிந்தது. "இந்த மனுசப்பயலுக மட்டும் என்னென்ன கொடும பண்ணுறானுங்க! யாரு கேட்கிறா! ஆனா! நாம மட்டும் சன்னியாசியா வாழணும்! கேடுகெட்ட ஜென்மங்கடா! இவனுங்க'' என்று ஆதங்கப்பட்டான் மொடாஸ். "கவலப்படாதடா, மணி. நாங்க இருக்கோம்! உன்ன யாரும் ஒதுக்க மாட்டாங்க! செவளச்சி உன்னப் புரிஞ்சுக்குவா. அப்படியே அவ உன்ன ஒதுக்கினாலும், நாங்க இருக்கோம்டா! என்னைக்கும் நீ எங்க மணிதான்டா!'' என்றபடியே சங்கு தன்னுடைய மூக்கால் மணியின் இடது காது மடலைத் தூக்கி உள்காதை சிறிதுநேரம் நக்கினான். அது மணியின் உடலுக்கும் மனதிற்கும் இதமாகவே இருந்தது. சிறிது நேரத்திற்குப்பின் மூன்றுபேரும் அங்கிருந்து கிளம்பினர். மொடாஸ் முன்செல்ல சங்குவும் மணியும் மெதுவாக அவனைப் பின்தொடர்ந்தனர். மூவரும் அருகிலிருந்த தென்னந்தோப்பிற்குள் நுழைந்தனர். தென்னம்மட்டைகள் எரிக்கப்பட்டு சாம்பல் நிறைந்து கிடக்கும் கிடங்குதான் இந்த மூவரும் வழக்கமாக சந்திக்கும் இடம். இவர்களின் பல சம்பாஷணைகள் நிகழுமிடம்..

"மணி! பசிக்குதாடா? கோழி சாப்பிடுறியா? பிடிச்சிட்டு வரட்டுமா?'' என்றான் மொடாஸ். "பசிக்குதுதான். இன்னிக்கு காலேல தயிர ஊத்தி சோத்தப்போட்டானுங்க! திங்க முடியல! ஓமட்டிக்கிட்டு வந்திடுச்சு. அப்படியே வெளிய வந்தவன்தான். பசி உசிரு போகுது. எதையாவது நமக்கு பிடிச்சதப் பிடிச்சுத் தின்னலாம்னா, கால எடுத்து வெச்சு ஓடமுடியல!'' என்று வருந்தினான் மணி. "இப்ப என்ன கோழிதான வேணும். அண்ணே மொடாஸ் இருக்கிறவரைக்கும் நமக்கு கவலையே இல்ல! "இம்ங்குறதுக்குள்ள ஒரு கோழி இங்கயிருக்கும்! போதுமா!'' என்றான் சங்கு. "நல்லா கோர்த்துவிட்டு பழகியிருக்கடா, சங்கு. மனுசப்பயலுக வாடை ஒங்கிட்ட தூக்கலாத்தான் இருக்கு! போய்ட்டு வர்றேன். உங்ககூட பழகின பாவத்துக்கு'' என்று சலிப்புடன் மொடாஸ் அங்கிருந்து கிளம்பினான். சிறிது நேரத்தில் ஒரு கோழியை வாயில் கவ்வியபடி அங்கு வந்தான். "சொன்னேன்ல... மொடாஸ் அண்ணேனா கொக்கான்னா!'' என்று விருட்டென்று எழுந்து மொடாஸை வரவேற்றான் சங்கு. "மொதல மணி சாப்பிடட்டும். மிச்சமிருந்தா நீ சாப்பிடு. பாவம் மணி'' என்ற மொடாஸின் கட்டளையை ஏற்றுக்கொண்டு சங்கு காத்திருந்தான். பாதியை மட்டும் சாப்பிட்டுவிட்டு மீதமிருந்த கோழியை சங்குவிடம் தந்தான் மணி. "இன்னும் கொஞ்சம் சாப்பிடு! ஒடம்பு சீக்கிரம் தேறிவந்திடும்'' என்றான் சங்கு. மொடாஸிற்கு சங்குவிடம் மிகவும் பிடித்த குணமே சங்கு சோத்துக்குப் பறக்க மாட்டான் என்பதுதான்.

மறுநாள் சங்குவும் மணியும் மொடாஸைத் தேடி வந்தனர். தெருவில் அவன் இல்லை. தோப்பிற்குச் சென்றனர். அவர்கள் வழக்கமாகக் கூடும் சாம்பல் கிடங்கிலும் அவன் இல்லை. சிறிதுநேரம் காத்திருந்தனர். தோப்பு வீட்டுப்பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தான் மொடாஸ். தன்னுடைய நாக்கினால் வாயைச் சுற்றித் துடைத்துத் துடைத்து ருசித்துபடி வந்தான். “என்னாண்ணே! அங்கிருந்து வர்ற! அங்க போகவே மாட்டேயே!” என்றான் சங்கு ஆச்சரியத்தில். அருகில் வந்து மொடாஸின் வாயை முகர்ந்துபார்த்து இரண்டு மூன்றுமுறை நக்கினான். “பாத்தேலே! புத்திய காட்டிட்டேலே! விட்டுப்புட்டுபோய் தின்னுட்டு வந்திட்டீலே!” என்றான் சங்கு ஆதங்கத்துடன். “என்னானு தெரியலடா! தோப்புக்காரன்தான் கூப்பிட்டுச் சோறு போட்டான்டா. நேத்துதான் அவன் கோழிய அபேஸ் பண்ணி மணிக்கு கொண்டுவந்தேன். இன்னிக்கு நல்லா வாடையா கறிச்சோறு! அண்ணே விடுவேணா! ஒரு பருக்க மிஞ்சல! அள்ளி எறிஞ்சுட்டேன். நல்ல... ருசிடா! மொத்தத்தில செம! தோப்புக்காரன் நல்லவன்டா!” என்று பெருமைபட்டுக்கொண்டே, மணியின் பக்கம் திரும்பி, “மணி! இப்ப எப்படியிடா இருக்கு? பரவாயில்லையாடா?” என்று விசாரித்தான் மொடாஸ். “நல்லா இருக்கு! மனசுதான்” என்று இழுத்தான் மணி. “இங்கபாரு, மணி! உசிருக்கு உத்திரவாதமில்லாத எனம் நம்ம எனம். புரிஞ்சுக்கோ! இன்னிக்கு இருக்கிறவன் நாளைக்கு இல்லேங்கிறது மனுசனுக்குத்தான். நமக்கெல்லாம். வேறமாதிரி. இப்ப இருக்கிறவன் அப்புறமில்ல! இதுதான் நமக்கு! புரியுதா? நீ செத்தா, ஒரு பள்ளத்தில உன்னத் தள்ளி மண்ணள்ளிப் போடுறதுக்கு உனக்கு ஆள் இருக்கு. நா, சங்கெல்லாம் செத்தா, எங்கள புதைக்க நாதி கிடையாது. நடுரோட்டுல வண்டியில அடிபட்டுச் செத்தா, ரோட்டோரமா இழுத்துப்போடக்கூட ஆள் கிடையாது. மணி, ஒன்ன நல்லா தெரிஞ்சுக்க. நாம உசிரோட இருக்கோம்ல!... உசிரோட இருக்கோம்ல!... சந்தோசப்பட்டுக்கணும்! அவ்வளவுதான்! இதுதான் நம்ம வாழ்க்க. இப்படித்தான் நம்ம வாழ்க்க ஓடும். ஒட்டணும். புரியுதா! . . . சங்கு! அவன கொஞ்சம் தேத்து!... சரி அதெல்லாம் விடுங்க! ... நைட்டுக்கு முசல் வேட்டைக்கு வர்றீங்களா?” என்று தடாலடியாகக் கேட்டான் மொடாஸ். “நான் ரெடி!” என்று சத்தமாகவே சொன்னான் சங்கு. “நான் வர்றேன். ஆனா! என்னால ஓட முடியுமான்னு....” என்று தயங்கினான் மணி. “நீயெல்லாம் ஓடவேண்டாம் வேடிக்கைப் பாரு! பிடிச்சுக்கிட்டுவர்ற முசல ருசி பாரு போதும்!... இன்னிக்கு நைட்டு! மறந்திடாதீங்க! இதே இடத்தில கூடுறோம்!” என்று அழுத்தமாகச் சொன்னான் மொடாஸ். சாம்பல் கிடங்கைவிட்டு சங்குவும் மணியும் கிளம்பிச் சென்றனர். மொடாஸ் சாம்பல் கிடங்கிலேயே சற்று ஓய்வெடுத்துவிட்டு வருவதாகச் சொல்லி அங்கேயே இருந்தான்.

இரவு பத்து மணி. சங்குவும் மணியும் தெருவிற்குள் நுழைந்தனர். தெருவின் ஓரங்களை நோட்டமிட்டவாறே நடந்தனர். ஆள் நடமாட்டமில்லை. தெருமின் கம்பங்களின் விளக்குகள் மட்டும் ஒளிர்ந்துகொண்டிருந்தன. மொடாஸ் தெருவில் இல்லை. இருவரும் தோப்பை நோக்கி நடந்தனர். சாம்பல் கிடங்கிற்கு அருகிலிருந்த சிறிய மின் கம்பத்தின் மங்கிப்போன ஒளி அவர்களுக்கு இருண்ட தோப்பிற்குள் வழிகாட்டியது. சாம்பல் கிடங்கிற்கு வந்து சேர்ந்தனர். அங்கே மொடாஸ் உடல் விறைத்துக் கிடந்தான்.

vasuaruntamil@gmail.com ■